Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 454/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டியராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | அழகர்சாமி | தொழில் | : | அரசு பேருந்து நடத்துனர் |
| கிராமம் | : | சீலையம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | தேனி | வயது | : | 46/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தேனி மாவட்டம் சீலையம்பட்டியில் வசித்து அரசு பேருந்து நடத்துனராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.12.2023 அன்று இரவு 08.50 மணியை போல TN 58 N 1974 என்ற அரசு பேருந்தில் நான் பணியில் இருந்தபோது, அந்த பேருந்து அன்று மாலை 05.00 மணிக்கு குமுளியில் இருந்து கிளம்பி திண்டுக்கல் வந்துகொண்டிருந்தபோது, செம்பட்டி அருகில் ஆதிலெட்சுமிபுரத்தில் இயந்திர கோளாறு காரணமாக பழுதாகி நின்றுவிட்டது. அந்த பேருந்தில் வந்த பயணிகளை மாற்று பேருந்தில் மாற்றி அனுப்பி வைத்தோம். நான் பழுதாகி நின்ற வாகனத்தின் இடதுபுறத்தில் சாலை ஓரத்தில் நின்றுகொண்டிருந்தபோது திண்டுக்கல் நோக்கி வந்த TN 57 N 2160 என்ற அரசு பேருந்து நான் கையால் சைகை காட்டியும் கவனிக்காமல் பேருந்தை இடதுபுறமாக ஓட்டி வந்து என் மீது மோதிவிட்டார். அந்த இடத்தில் இருந்த சீவல்சரகு என்ற ஊருக்கான பெயர் பலகையில் பஸ் மோதி நின்றது. அந்த பெயர் பலகை இல்லை என்றால் எனக்கு உயிர் சேதம் ஏற்பட்டிருக்கும்.

இந்த விபத்தில் எனக்கு வலது தோளின் மேல் எலும்பு உடைந்துவிட்டது. வலது கை முன் கை மணிக்கட்டு உடைந்துவிட்டது. பஸ் மோதி நான் தூக்கி எறியப்பட்டதில் வலது பக்க தலையின் முன்பகுதியில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுவிட்டது. இடது முழுங்காலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுவிட்டது. என் மீது பேருந்தை ஓட்டி மோதிய எதிரி பாலமுருகன் தான் என்னை செம்பட்டியில் உள்ள பாக்கியமீனா என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு அரை மணி நேரம் முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பழுதாகி நின்ற நான் வந்த பேருந்தை சரிசெய்துவிட்டதால் அந்த பேருந்திலேயே சென்றுவிட்டேன். நான் வந்த அரசு பேருந்தின் ஓட்டுநரும், என்னை மோதிய அரசு பேருந்தின் நடத்துனரும் சம்பவத்தின் போது உடன் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனுவை என் அண்ணன் எழுதினார். புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆதிலெட்சுமிபுரத்தில் நான்கு ரோடு சந்திக்கும் இடத்திலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி திண்டுக்கல் செல்லும் வழியில் விபத்து ஏற்பட்டது என்றால் ஆதிலெட்சுமிபுரத்தில் நான்கு ரோடு சந்திக்கும் இடத்திலிருந்து 50 மீட்டர் தள்ளி விபத்து நடந்தது. ஆதிலெட்சுமிபுரத்தில் நான்கு ரோடு சந்திக்கும் இடத்திற்கு தென்புறமாகவும், அதற்கு சற்று கிழக்குபுறத்தில் போலிசாரால் இரும்பால் ஆன தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் தடுப்பை முழுவதும் தாண்டி தான் எங்களது பேருந்து பழுதாகி நின்றது. அந்த தடுப்புகளை தாண்டி அரசு பேருந்து வேகமாக சென்றிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, தடுப்புகள் குறுகலாக வைக்கவில்லை, அகலமாக வைத்திருந்ததால் வாகனம் வேகமாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

திண்டுக்கல்லில் இருந்து எதிர்திசையில் வத்தலகுண்டு வழியாக செல்லும் மற்ற வாகனங்களும் அதே ரோட்டில் தான் வரவேண்டும் என்றால் சரிதான். ஒரே நேரத்தில் எதிர்எதிரே வரும் வாகனங்கள் தடுப்பு அமைக்கப்பட்டிருந்த இடத்தில் கடந்து செல்ல முடியாது என்றால் சரிதான். ஒரே சமயத்தில் எதிர்எதிர் திசையில் இரு வாகனங்கள் தடுப்பு அருகில் வந்தால் மற்றொரு வாகனம் நின்று வழிவிட்டால் தான் எதிர் திசையில் வரும் வாகனம் கடந்து செல்ல முடியும் என்றால் சரிதான், அந்த நேரத்தல் எதிர்திசையில் வாகனம் வரவில்லை. எத்தனை வருடங்களாக அரசு பேருந்தின் நடத்துனராக உள்ளீர்கள் என்றால் 2012 ஆம் அண்டில் பணியில் சேர்ந்தேன்.

நீங்கள் நடத்துனராக பயிற்ச்சி எடுத்துக்கொண்ட காலத்திலும், பின்னிட்டும் ஒரு வாகனம் இயந்திர கோளாறு காரணமாக இடையில் நின்றுவிட்டால் மற்ற வாகனங்களுக்கு சமிக்கை காட்டும் விதத்தில் சமிக்கை விளக்குகளை பேருந்து நிற்கும் இடத்திற்கு இருபுறமும் வைக்க வேண்டும் என்று உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். பயணிகளை மற்ற பேருந்தில் ஏற்றிவிட்டு நான் இந்த முன் ஏற்பாடுகளை செய்வதற்கு முன்பே விபத்து நடந்துவிட்டது. விபத்து நடந்த இடத்தில் நீங்கள் சமிக்கை விளக்குகளை முன்னும், பின்னும் வைக்கவில்லை என்றால் சரிதான் அதற்குள் விபத்து நடந்துவிட்டது. நான் வந்த பேருந்தின் பின்புறத்தில் விளக்கு எறிந்தது.

இரவு 08.50-09.00 மணிக்குள் நீங்கள் வந்த பேருந்து பழுதாகி நின்றுவிட்டது என்றால் சரிதான். பின்னால் மற்றும் முன்னால் வரும் வாகனங்களுக்கு இரவில் நீங்கள் கை சைகை செய்வதை பார்க்க முடியாது என்றால் சரியல்ல, அந்த இடத்தில் மின் விளக்கு கம்பம் இருந்தது. இரு வாகனங்கள் எதிர்எதிரே வரும்போது முன்விளக்கின் வெளிச்சம் காரணமாக காட்டும் சைகைகள் தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். ஆனால் இந்த விபத்தில் எதிரே வாகனம் வரவில்லை. நீங்கள் வந்த பேருந்து சம்பவ இடத்தில் ரோட்டின் எந்த திசையில் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் திசை எனக்கு தெரியாது, ஆனால் நாங்கள் சென்ற திசையில் பேருந்தின் வலது புறம் மட்டும் தான் தார் ரோட்டில் இருந்தது, இடது புற சக்கரங்கள் மண் ரோட்டில் இருந்தது, இடது புறத்தில் நான் நின்றுகொண்டிருந்தேன்.

ஏற்கனவே வாகனம் நின்ற இடத்திலிருந்து எந்த பகுதியில் நிறுத்துவதற்காக நீங்கள் இருந்தீர்கள் என்றால் ஏற்கனவே நின்ற இடத்திற்கு இடதுபுறத்தில் நிறுத்தலாம் என்று இருந்தோம். ஆதிலெட்சுமிபுரம் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து தடுப்பை தாண்டி 50 மீட்டர் தொலைவில் விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ள நிலையில் மீண்டும் பின்நோக்கி பேருந்தை எடுத்துவந்தால் தடுப்புகளில் அருகில் வந்து மற்ற வாகனங்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாக அமையும் என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு உங்களுடைய

கிளை அலுவலகத்திலிருந்து அனைவரும் வந்து பார்த்த பிறகு தான் நீங்கள் மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் இல்லை.

நீங்கள் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றும், நீங்கள் வந்த பேருந்து ரோட்டின் நடுவில் நின்றுகொண்டிருந்தது என்றும், நீங்கள் அதற்கு பின்புறமாக கிழக்குபுறத்தில் இருந்து வாகனத்தை பின்நோக்கி வரச்சொல்லி சொல்லிக்கொண்டிருக்கும்போது எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் உங்களுடைய கவனக்குறைவு தான் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யான காரணங்களை நீங்கள் கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 454/2024**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துமாரி | ஜாதி | : | |
| த/பெ | : | பாண்டியராஜன் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | சீலையம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | தேனி | வயது | : | 41/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தேனி மாவட்டம், சீலையம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.12.2023 அன்று நான் சீலையம்பட்டியில் இருந்தபோது, என் கணவர் பாண்டியராஜனுடன் அரசு பேருந்தில் பணியில் இருந்த வாகன ஓட்டுநர் முனிராஜ் என்பவர் எனக்கு போன் செய்து என் கணவருக்கு வாகன விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார். அன்று இரவு 01.00 மணியை போல நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் இருந்த என் கணவரை நான் பார்த்தேன். அவருக்கு வலது கையிலும், வலது முன் தலையிலும், காலிலும், கையிலும் அடிபட்டிருந்தது. திண்டுக்கல்லில் 9 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாகன விபத்து எவ்வாறு நடந்தது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவை போலிசார் சொல்ல சொல்ல உங்கள் மகன் எழுதினார் என்றால் சரியல்ல, என் கணவரின் அண்ணன் எழுதினார்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 454/2024**

**Deposition of PW.3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிச்சாமி | ஜாதி | : | |
| த/பெ | : | கருப்பையா | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சீலையம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | தேனி | வயது | : | 44/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தேனி மாவட்டம், சீலையம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பாண்டியராஜன் எனக்கு அண்ணன் உறவு முறை ஆவார். கடந்த 05.12.2023 அன்று இரவு 09.30 மணிக்கு மேல் என் அண்ணி முத்துமாரி அண்ணன் பாண்டியராஜனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக என்னிடம் சொன்னார். பிறகு நாங்கள் அங்கிருந்து கிளம்பி வந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பாண்டியராஜனை பார்த்தோம். அவருக்கு உடம்பின் வலது புறத்தில் காயங்கள் காணப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்தை நீங்கள் கேள்விபட்டு தான் நான் வந்து மருத்துவமனையில் பார்த்தேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் நீங்கள் தான் புகாரை எழுதி உங்கள் அண்ணனுக்காக கொடுத்தீர்கள் என்றால் சரிதான். போலிசார் சொல்ல சொல்ல நீங்கள் புகாரை எழுதினீர்களா என்றால் இல்லை என் அண்ணன் சொல்லி புகார் மனுவை எழுதினேன். புகாரில் உள்ள எதிரி ஓட்டி வந்த வாகனம் மற்றும் எதிரியின் பெயரை யார் சொன்னது என்றால் என் அண்ணன் பாண்டியராஜன் சொன்னார். விசாரணைக்காக வந்த காவலர்கள் சொன்ன தகவலின்

அடிப்படையில் நீங்கள் புகார் எழுதி சாட்சி கையொப்பம் செய்துவிட்டு உங்கள் அண்ணனுக்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor